REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 28உ புதன் (13—11—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 29உ வியாழன் (14—11—57) [இதழ் 130

1,46,000 இந்தியர் பாதிக்கப்படுவர்

புதுடில்லி, நவ. 11—

தென்னாப்பிரிக்காவில் டர்பன் நகரில் இன ஒதுக்கல் கொள்கையின் அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ள இனவாரிப் பிரதேசச் சட்டம் அமுலாக்கப்பட்டால், சுமார் 1,46,000 இந்தியர்கள் தங்களின் இல்லங்கள், வியாபார நிலையங்கள், மதம், மற்றும் கலாச்சார நிலையங்கள் இவற்றை எல்லாம் விட்டுவிட்டு வெளியேற வேண்டிய அவலநிலை ஏற்படுமாம்!

இந்தத் தகவலை மக்கள்சபையில் திருமதி இலட்சுமிமேனன் தெரிவித்திருக்கிறார்.

திணிக்கப்படும் இந்தியின் இலட்சணம்

புதிய சட்டம் பற்றி சட்ட சபையில்

அண்ணா

(1) புதிய சட்டம், தேவையற்றது — தீமை பயப்பது — கொடுங்கோன்மைக்கு வழிகோலுவது.

(2) காங்கிரஸ் கட்சி புதிய அடக்குமுறைக் கருவியைக் கூர்தீட்டிக்கொள்ளுகிறது.

(3) மெஜாரிடி பலத்தைக் கொண்டு நிறைவேற்றப்படும் இந்தச் சட்டம், காங்கிரசின் பலவீனத்தையே காட்டும்.

(4) சட்டம்போட்டு கொடியை, அரசியல் சட்டத்தை, காந்தியார் படத்தைப் பாதுகாக்க முனைவது கண்டு உலகம் எள்ளி நகையாடும்.

(5) சட்டம் இயற்றுவது விரும்பத் தகாத செயல்களைச் செய்யவே தூண்டும்.

(6) இப்பொழுது தேவை சட்டமல்ல—சந்திப்பு; காமராஜ்—பெரியார் சந்திப்பு.

என்பதாக எடுத்துக்காட்டிப் பேசினார்.

"மூன்று ஆண்டு கடும் தண்டனை என்று மிரட்டுவதில் பயனில்லை. தன் மனதிற்குச் சரி என்று பட்ட கொள்கையின்படி நடந்துகொள்ளும்போது, சட்டம் குறுக்கிட்டால், தண்டனைகளைத் துச்சமென்று எண்ணி சிறை செல்லக் கூடியவர்கள், தமிழகத்தில் இலட்சக்கணக்கிலே உள்ளனர்"

என்பதை எடுத்துரைத்தார்.

"இயற்கைப் பாசத்தைக்கூட மறந்துவிட்டு, உங்களுக்காக இரவு பகலென்று பாராமல் தேர்தல் காலத்திலே உழைத்தார்; தன் செல்லப்பிள்ளை காமராசர் ஆட்சியில், தம்மால் எம். எல். ஏ.-க்கள் ஆக்கப்பட்டவர்களின் ஆட்சியிலே, தமது சாதி ஒழிப்புத் திட்டத்துக்கு ஆதரவு கிடைக்கும் என்று நம்பினார்; நம்பினவரை நீங்கள் நட்டாற்றில் விடுகிறீர்கள்"

என்று, காங்கிரஸ் அமைச்சர்களையும் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்களையும் இடித்துரைத்தார்.

"உங்கள் யூகம் மங்கிவிட்டது.

"நீங்கள் இராஜதந்திரத்தைக் காட்டத் தவறுகிறீர்கள்.

"நிலைமையை மோசமாக்குகிறீர்கள்"

என்று, ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

"முதலமைச்சராவதற்கு முன்பு சாதி ஒழிப்பு மாநாட்டிலே கலந்து பேசிய காமராசர், அதிகாரத்துக்கு வந்தால் தமது முதல்வேலை சாதி ஒழிப்பாகத்தான் இருக்குமென்று பேசிய உறுதிமொழி இன்று எங்கே போயிற்று?"

என்று கேட்டார்.

பிரச்சினைகளைச் சமாளிக்க முடியாமல் 'ஓடிவிடுகிறார்கள்' தி. மு. கழகத்தார் என்று நிதி அமைச்சர் பேசியதைக் குறிப்பிட்டு,

"எங்கள் விஷயமாக இவ்வளவு பேசும் அமைச்சர், இன்று பெரியார் குறித்த நெஞ்சு நெகிழத்தக்க பிரச்சினை விவாதிக்கப்படும் போது காமராசர் எங்கே? ஓடிவிட்டாரா, ஒளிந்து கொண்டாரா? வேறு எங்காவது மனதுக்குச் சாந்தி தேடிக்கொள்ளுகிறாரா?

என்று கேட்டார்.

"பெரியாரைச் சந்தித்துப் பேசச் செல்லட்டும் என்று பக்தவத்சலனார் கூறியதற்குப் பதிலளிக்கையில்,

"நான் சென்று சந்திக்கிறேன்; ஆனால் அதுவரையில், மசோதாவைச் சட்டமாக்காமல் நிறுத்தி வைக்க நீங்கள் தயாரா?"

என்று கேட்டு, 'காங்கிரஸ் ஆட்சியினரின் உண்மை நோக்கம் சமரசம் அல்ல' என்பதை அம்பலப்படுத்தினார்.

தேசியத் தலைவர் படங்களையும், மத வடுகளையும் கொளுத்துவது உலகிலே எந்த நாட்டிலேயும் நடைபெற்றதில்லை என்று பேசிய கம்யூனிஸ்டுகளுக்குப் பதில் கூறுகையில்,

"துரதிருஷ்டவசமாக இந்தக் கம்யூனிஸ்டு நண்பர்கள் ரஷ்யாவில் இல்லை; இருந்திருந்தால், ஸ்டாலின் சிலைகளை உடைக்க வேண்டாமென்று கூறி குருஷேவ் கரத்தைப் பிடித்து இழுத்து நிறுத்தி இருப்பார்கள் போலிருக்கிறது.

"புனித பைபிளையே, மார்ட்டின் லூதர் கொளுத்தித் தம் கண்டனத்தைத் தெரிவித்ததை, வேறு காரியங்களுக்காக அடிக்கடி ஐரோப்பா சென்று வரும் கம்யூனிஸ்டுத் தலைவர், ஓய்வு நேரத்திலாவது தெரிந்துகொண்டு வரக்கூடாதா?"

என்று கேட்டார்.

முழுப் பேச்சு—(சட்ட சபையில் பேசியபடியே)— 17—11—57 ஞாயிறன்று வெளிவரும் 'நம் நாடு' தனி இதழில் இடம் பெறும்.

சொந்த மாநிலத்திலேயே ஆட்சிமொழியாக எதிர்ப்பு?

'தகுதி இன்னும் பெறவில்லை' என்கிறார் முதன் மந்திரி

'பீகாரே தவணை கேட்பது தென்னவரின் எதிர்ப்பை நியாயப்படுத்தாதா?

சட்டசபையில் கேள்வி

இந்தி மாநிலமான பீகாரிலேயே, இந்தி ஆட்சி மொழியாவதற்கு இன்னும் தகுதி பெறவில்லை என்று, மாநில சட்டசபை முடிவு செய்திருக்கிறது.

கடந்த ஏழாண்டுக்காலமாக இந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்ற தீர்மானத்தை அமுல் செய்ய சர்க்கார் முயற்சித்துவருகிறது; முடியவில்லை. எனவே மேலும் மூன்றாண்டுக்காலம் வேண்டும்—இந்தியை மாநில ஆட்சி மொழியாக்க மேலும் தவணை வேண்டும் என்ற சர்க்காரின் மசோதா, இரு நாள் விவாதத்திற்குப் பிறகு நேற்று சட்டசபையில் நிறைவேறியிருக்கிறது.

இந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய ஹர்பான்ஸ் நாராயண் சிங் என்ற காங்கிரஸ்காரர், 'இந்தியப் பரப்புவதில் பீகாருக்கென ஒரு தனிப் பொறுப்புண்டு; இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்கு மேலும் மூன்றாண்டுக்காலத் தவணை வேண்டுமென இந்தி வழங்கும் பீகார் மாநிலமே கேட்டால், தென்னாட்டு மக்கள் இன்னும் நூற்றாண்டுக் காலத்திற்கு இந்தியைக் கொண்டுவரக்கூடாது என்று எதிர்ப்பது முற்றிலும் நியாயமானதாகிவிடாதா?' என்று கேட்டாராம்!

திருத்த மசோதாவைக் கொண்டுவந்து பேசுகையில் முதன் மந்திரி டாக்டர் ஸ்ரீகிருஷ்ண சின்ஹா,

"நிர்ணயிக்கப்பட்ட தேதியான 1959 நவம்பர் 29-ந் தேதிக்குள் இந்தியை மாநிலத்தின் ஆட்சி மொழியாக எல்லா நிர்வாகக் காரியங்களுக்கும் புகுத்திவிட முடியாது; ஏனெனில், அதிகாரிகளும், இதர உத்தியோகஸ்தர்களும் இந்தியில் குறிப்பு மற்றும் கடிதங்கள் எழுத இன்னும் போதுமான பயிற்சி பெறவில்லை. மேலும், இந்தியை ஏற்றுக்கொள்ள உயர் நீதிமன்றமும் தயாரில் இல்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படி இந்தி வழங்கும் மாநிலத்திலேயே மாநில ஆட்சி மொழியாகக்கூடத் தகுதி பெறாத இந்தியைத்தான், இந்தியா முழுமைக்கும் ஆட்சிமொழியாக்கிவிட டெல்லி சர்க்கார் துடிக்கின்றனர்.

'இந்தியைக் கற்பதற்கு இலஞ்சமா?'

'ஆட்சி மொழி, உத்தரவுகளால் உருவாகி விடாது'

'செவிலித் தாய்கள் இருவர் இருக்கலாம்; ஆனால் பெற்ற தாய் இருவராயிருக்க முடியாதே!'

'இந்தி எதிர்ப்பை பண்டிதருக்கு மாணவர்களும் உணர்த்தவேண்டும்'

பச்சையப்பன் கல்லூரியில் ஆச்சாரியார் ஆய்வுரை

"தாய் மொழி என்பது வழியில் இருக்கும் வேலி போன்றது; அதைச் சுலபத்தில் கடந்துவிட முடியாது. அது உறுதியானது—நிரந்தரமானது.

"ஒருவருக்கு இரண்டு செவிலித் தாய்கள் இருக்கலாம்; ஆனால், இரண்டு தாய்கள் இருக்க முடியாது.

"இந்தியாவில் இன்று பல தாய்மொழிகள் இருக்கின்றன. அவற்றை நாம் ஒதுக்கிவிட முடியாது.

"இந்த மொழிப் பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவதில் சிரமம் எல்லாம், சிலர், சுலபத்தில் ஒதுக்கிவிட முடியாத உண்மைகளைப் பார்க்க மறுத்துவிட்டு, பிரச்சினைக்குப் பரிகாரம் காண விரும்புவதுதான். இவையெல்லாம் நிரந்தரமான கஷ்டங்கள். முரட்டுப் பேச்சுக்களினால் பரிகாரம் தேட முடியாது; வேறு வழி கண்டாகவேண்டும்.

"விட்டுக்கொடுப்பதுதான் பிரச்சினைக்குப் பரிகாரம் காண உள்ள ஒரே வழி; முரட்டுப் பேச்சும் பலாத்காரமும் அல்ல!

"விட்டுக்கொடுப்பது - உடன்பாட்டிற்கு வருவது என்பது, நியாயம்—நேர்மை இவற்றின் அடிப்படையிலிருக்க வேண்டும். அநீதி, தீர்வு காணுவதற்குக் கொள்கையாயிருக்க முடியாது.

"தேசப்பற்று என்ற பெயரில் சிலர், இங்கிலாந்து, பிரான்ஸ் இங்கெல்லாம் இருப்பதைப்போல, ஒரே மொழி பேசுகிற மக்களைக் கொண்டதாக இந்தியா இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர்; அவர்கள், ஆங்கிலம் அன்னியரின் மொழி என்கின்றனர்; எனவேதான், நான் ஆங்கிலம் நீடிக்க வேண்டும் என்று கூறும்போது கோபப்படுகின்றனர்"

—என்று திரு. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், பச்சையப்பன் கல்லூரியில் 'மொழிப் பிரச்சினைகள்' பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"இந்தியாவில் இந்தி பேசுவோர் மொத்த மக்கள்தொகையில் ஐந்தில் இரு பங்கினர்தான்; எஞ்சியோர், வெவ்வேறு மொழி பேசுவோராவர். எனவேதான், இப்போது போலவே ஆங்கிலம் நீடிக்கவேண்டும் என்கிறேன்.

"ஆங்கிலத்தில் நாம் பெற்றுள்ள அறிவுத் திறனளவு இந்தியில் பெறவேண்டுமானால், பல காலமாகும். 150 ஆண்டுக் காலமாக ஆங்கிலத்தில் பெற்ற திறனை, 10 ஆண்டுகளுக்குள் இந்தியில் பெற்றுவிட முடியாது. ஆங்கிலம் இந்தியாவின் பொது வாழ்வில் ஒரு இடம் பெற்றுவிட்டது. சில உத்தரவுகளால் அதை நீக்கிவிட முடியாது. ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை சில கட்டளைகளால் அமர்த்திவிட முடியாது.

"இந்த மொழிப் பிரச்சினையை நான் மிக அவசரமான பிரச்சினை எனக் கருதுகிறேன். ஏனென்றால், பிரதமர் பண்டித நேரு, 'இந்தி திணிக்கப்படமாட்டாது; சாவதானமாகத்தான் செய்வோம்' என்று கூறியிருக்கிறார்.

"பண்டிதர் உண்மையில் நியாயம் நிரம்பியதும், பரந்ததுமான உள்ளம்படைத்த ஒரு பிரதமர்; எனவே, அவரது கரங்களை நாம் வலுப்படுத்த வேண்டும்; இந்தி உற்சாகிகள் அவரை வெற்றி கொள்ளுமுன், நாம் அவரது கரத்தைப் பலப்படுத்தவேண்டும். நாம் மிகவும் ஜாக்கிரதையாகவும் உன்னிப்புடனுமிருந்து கவனிக்கவேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ்

சென்னை 13—11—57 புதன்

கொன்றுவிட்டனரா?

★

மனச்சாட்சி என்பது ஒரு விசித்திரமான உணர்ச்சி. மனிதனின் வேறெல்லா உயர்ந்ததும் தாழ்ந்ததுமான உணர்ச்சி—எழுச்சிகளுக்கு இது வழி காட்டும்போதுதான் அவனது சிந்தனைகள், செயல்கள் எல்லாம் நேர்மைவழி பிறக்க முடியும். தீயனவற்றின் கவர்ச்சி ஊட்டுகிற உணர்ச்சி மேலிடும்போது, ஒருவன் தீயன செய்துகொண்டிருந்தாலும், அவனது இந்த உள்ளுணர்வுமட்டும் நியாயம் எது—அநியாயம் எது என்பதை அவனுக்கு உணர்த்தத் தவறுது. அவனே அறியாமலே திடீரென எழுந்து, தனது முழு வலிமையையும் வெளிக்காட்டி, இந்த மனச்சாட்சி அவனது உள்ளத்தில் ஆட்சி புரியும்போது, தான் புரியும் தீமைகள், இழைக்கும் அநீதிகள், செய்துவரும் கொடுமைகள்- இன்னோரன்னவைஎல்லாம் அவன் கண்முன் நிழலாடும்; அவன் நிதானம் பெறுவான்; கண்ணீர் சொரிவான்; சரி-தவறு உணருவான்; திருந்துவான். இந்த மனச்சாட்சியை என்றைக்குமே எழ முடியாதவாறு முடமாக்கிவிட ஒருவராலும் முடியாது.

ஆனால், தென்னுப்பிரிக்க நாட்டு ஆட்சியாளர்—வெள்ளையர், தங்களின் மனச்சாட்சியைக் கொன்றுவிட்டனரோ—இயற்கை நியதியை வென்றுவிட்டனரோ என ஐயுற வேண்டியுள்ளது.

தென்னுப்பிரிக்க சர்க்கார், அந்த நாட்டில் வாழும் நீக்ரோவர்களுக்கும், இதர வெள்ளையரல்லாத இனமக்களுக்கும்புரிந்துவரும் கொடுமைகள் நாளும் வளருவதைக் காணும்போது, இந்தச் சந்தேகம் எவருக்கும் தோன்றுமற்போகாது.

நீக்ரோவர்களுடையவும், இதர இன மக்களுடையவும் மனித உணர்ச்சிகளை, வெள்ளையரின் நிறத் திமிர் புண்படுத்தி வரும் கொடுமைக்கு அளவே இல்லை.

தாங்கள் எட்டிப்பிடித்திருக்கும் நிறத் திமிரின் உச்சத்தை, உலகத்தவர் அளவிட்டுக் கொள்ள இந்த வெள்ளையர்கள் பல சட்டங்களை நிறைவேற்றி அமுல் செய்துவருவதுடன், அவ்வப்போது பேசியும் வருகின்றனர்.

வெள்ளையரல்லாத மக்களின் அரசியல் உரிமைகளைப் பறித்துக்கொண்டு இப்போது அவர்களைப் பொருளாதாரத் துறையிலும் சிறுகச் சிறுக சீர்குலைத்துவருகின்றனர். குடியேறிய இவர்களுக்கு, பூர்வீக மக்களும் இதர குடியேற்ற மக்களும் கைகட்டி வாய்புதைத்துச் சேவகம் புரியவேண்டும் என்ற அடிமை கொள்ளும் மோகத்தால், வெள்ளையர் அத்தகு கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

இக்கொடுமைகளின் தோற்றுவாயான இன ஒதுக்கல் என்ற தென்னுப்பிரிக்க சர்க்காரின் கொள்கையே மனித இன உரிமைகளுக்கு விரோதமானது என்ற உலக அபிப்பிராயம் இந்தக் கொடுமைகளுக்கு எதிராக இருந்தபோதிலும், அவற்றைத் தடுக்க இந்த அபிப்பிராயம் இன்னும் உரம் பெறுமலிருப்பது வருந்துதற்குரியதாகும்.

இந்த உலக அபிப்பிராயத்திற்கு, கொடுமைபுரியும் தென்னுப்பிரிக்க சர்க்கார் தரும் மதிப்பினை, அந்த சர்க்காரில் உள்நாட்டு மந்திரியாயிருக்கும் டாக்டர் எபன் டாங்க்ஸ் என்பவரின் சமீபத்திய முரட்டுப் பேச்சு ஒன்று காட்டுவதாயிருக்கிறது.

"இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடுவது, வெள்ளையரின் தற்கொலைக்கொப்பானது; வெள்ளையரல்லாதாருக்கு அரசியல் உரிமைகள் வழங்கினுல் வெள்ளையர்களின் கதி அதோகதிதான்; எனவே, எத்தனை எதிர்ப்பு கிளம்பினுலும் அந்தக் கொள்கையைக் கைவிட மாட்டோம்" என்று அவர் வெறிக் கூச்சலிட்டிருக்கிருர்.

தென்னுப்பிரிக்க சர்க்காரின் உண்மையிலேயே தற்கொலைக்கு ஒப்பான இந்தப் போக்கினைத் தடுத்து நிறுத்த—மனித உரிமைகளைக் காப்பாற்றித்தர, பொறுப்புடைய ஐ. நா. சபையினுல் இயலவில்லை. கடந்த பதிஞெரு ஆண்டுகளாக வேண்டுகோள் விடுத்துத் தீர்மானம் நிறைவேற்றுவதுதான் அதனுல் இயன்றிருக்கின்றது.

ஐ. நா. சாசனத்தின் இரண்டாவது விதி ஏழாவது உட்பிரிவு—அங்கம் வகிக்கும் ஒரு அரசின் உள்நாட்டு விவகாரங்களில் ஐ. நா. தலையிடக்கூடாது என்ற விதி, ஐ. நா. உருவான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குத் தடையாயிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்குக் காரணம், ஐ. நா.-வின் பிரதான பொறுப்புடையவர்கள், தாங்கள் மற்றொரு நாட்டு மக்களின் ஜீவாதாரமான உரிமைகளைப் பறித்துப் புரியும் கொடுமைக்கு தண்டனை பெறுமல் தப்ப, இந்த விதியைப் பயன்படுத்தி, சுய ஒழுக்க ரீதியான பலத்தை இழந்து நிற்பதுதான். அதனுல்தான், தென்னுப்பிரிக்க சர்க்காரிடமிருந்து அங்கு வாழும் வெள்ளையரல்லாத மக்களைக் காப்பாற்றி, அவர்களுக்கு உரிய ஜீவாதாரமான உரிமைகளைப் பெற்றுத்தர ஐ. நா. சபையால் முடியவில்லை என்ற கருத்து தவறுடையதாகாது.

ஐ. நா.-வில் அங்கம் வகிப்பவர்கள், தங்களுடைய இந்தப் பலவீனத்தை உணருவதில்தான், தென்னுப்பிரிக்காவில் வெள்ளையர் புரியும் கொடுமைகளை மட்டுமல்ல—உலகில் எங்கெல்லாமோ நிலவுகிற அநீதிகளையும் துடைப்பது, ஐ. நா. சபைக்கு சாத்தியமாவது இருக்கிறது. தற்காலிகமான சில சில்லறைத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் அற்ப ஆசைகளுக்காக ஐ. நா.-வில் அங்கம் வகிப்பவர்களும், தென்னுப்பிரிக்க சர்க்காரைப் போல தங்களின் மனச்சாட்சியைக் கொன்றுவிடக் கூடாது.

தஞ்சை மாவட்டத்தில்

பயிர்களுக்கு ஆபத்து வராதாம்!

அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளதாம்!

சென்னை, நவ. 12—

தஞ்சை மாவட்டத்தில் ஒருசில பகுதிகளில், பூச்சிகளின் காரணமாக நெல் பயிர்கள் சேதமடைவதைத் தடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டுள்ளது என்றும், மேலும் தடுப்பு மருந்துகளை வழங்கிப் பயிர்களைக் காப்பாற்ற முன்வரும் என்றும் தஞ்சை உறுப்பினர் இராமலிங்கம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு, சட்டமன்ற 40-வது விதியின் கீழ் அமைச்சர் பக்தவத்சலம் அறிக்கை ஒன்று வெளியிட்டார்.

ஆயுதப் போலீஸ் படைக்குக் கைவிரிப்பு!

வீட்டு வாடகைப் படி தருவதற்கில்லையாம்!

சென்னை, நவ. 12—

"ஆயுதம் தாங்கிய போலீஸ் படையினருக்கு வீட்டு வாடகைப் படி தருவதற்கில்லை" என்று போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம், சட்டமன்றத்தில், கேள்விநேரத்தின்போது தெரிவித்தார்.

பஞ்சாப் கிராமத்தின் 'சாதனை!'

புதுடில்லி, நவ. 10—

பஞ்சாப் கிராமம் ஒன்றில் நபர் வருமானம் ரூ. 1,000 என்ற நிலை ஏற்பட்டுள்ளதாம்! இது இந்தியாவின் நபர் வருமானத்தைப்போல நான்கு பங்காகும்! இத்தகவலை பண்டித நேரு தெரிவித்திருக்கிருர்.

அக்கிராமத்தில் 800 பேர் வசிக்கின்றனர் என்றும், அது பக்ரா அணை அருகே ஒரு மைல் தொலைவில் உள்ளது என்றும், அக்கிராமம் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்தில்அடங்கியது என்றும் கூறப்படுகிறது.

"இதைப்போல எல்லா கிராமங்களும் முன்னேறினுல் அந்த நான்தான் மிக மகிழ்ச்சியான நாளாகும்" என்றும் பண்டிதர் கூறியிருக்கிருர்.

வெள்ளையரல்லாதார் அரசியல் உரிமை பெறுவது ஆபத்தாம்!

தற்கொலை செய்து கொள்ள வெள்ளையர் தயாரில்லையாம்!

தென்னுப்பிரிக்க வெள்ளையர் தலைவர் வெறிக்கூச்சல்

கேப்டவுன், நவ. 10—

"இன ஒதுக்கல் கொள்கையைக் கைவிடுவது தற்கொலைக்கு ஒப்பானதாகும்" என்று, தென்னுப்பிரிக்க மந்திரி ஒருவர் வெறிகொண்டு கூவியிருக்கிருர்.

இந்தக் கூச்சல்தான்—'இன ஒதுக்கல் கொள்கையா அல்லது தற்கொலையா; என்ற கூச்சல்தான்—தேர்தல் கோஷமாக இருக்கிறதாம், ஆளும் கட்சியான தேசிய கட்சியினருக்கு!

அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்களுக்கு இப்போதிருந்தே, பிரதமரான ஹான்ஸ் ஸ்ட்ரீடம், மற்றும் மந்திரிகளும் பிரச்சாரம் துவங்கிவிட்டனராம்!

தேர்தலில், இந்த 'இன ஒதுக்கல்' கொள்கையை வைத்தே தாங்கள் போட்டியிடப்போவதாக பிரதமரே கூறியிருக்கிருராம்!

"'இன ஒதுக்கல்' கொள்கையைக் கைவிட முடியாது; வெள்ளையரல்லாதார் அரசியல் உரிமைகள் பெற்றுல், தென்னுப்பிரிக்காவில் வெள்ளையருக்கு முடிவு கட்டுவதாக முடியும். வெள்ளையர் தற்கொலை செய்துகொள்ளத் தயாராக இல்லை; எவ்வளவு எதிர்ப்பு கிளம்பினுலும், நாங்கள் 'இன ஒதுக்கல்' கொள்கையைக் கைவிடப்போவதில்லை" என்று, வெள்ளையருக்கு வெறியூட்டும் வகையில் பிரதமரும், இதர தேசியக் கட்சியினரும் பேசி வருகின்றனராம்!

தேசியக் கட்சியை எதிர்க்கப் போவது, ஐக்கியக் கட்சி என்ற ஒரே ஒரு கட்சிதான்.

இந்தக் கட்சிக்கு தோல்வியை மட்டும் தாமல் இதனை ஒரேயடியாக ஒழித்துவிடும் வகையில், வெள்ளையர், தேர்தலின்போது தேசியக் கட்சிக்கு ஆதரவு தருவது நிச்சயம்என, ஒரு மந்திரி பேசியிருக்கிருராம்!

ஐக்கியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், 'தேசியக் கட்சியின் ஆட்சிக்கு முடிவுகட்ட கடைசி சந்தர்ப்பம் இதுதான்; இன்றேல் தென்னுப்பிரிக்கா உண்மையில் பெரிய தொரு விபத்தைச் சந்திக்க நேரிடும்' என்று கூறிவருகின்றனர்!

அசாமில் தொழிற்சாலை கோரிகிளர்ச்சி

மக்கள் சபை உறுப்பினருக்கு சிறைத் தண்டனை

புதுடில்லி, நவ. 11—

மக்கள் சபை உறுப்பினரான ஹெம்பரொள என்பார், அசாமில் நடைபெறும் எண்ணெய்த் தொழிற்சாலைக் கிளர்ச்சியை ஒட்டி கௌஹாத்தி மாஜிஸ்திரேட் அலுவலகத்திற்குள் நுழைந்தமைக்காகக் கைது செய்யப்பட்டு, கோர்ட் கலையும்வரை தண்டனை தரப்பட்டிருக்கிருர் என்ற தகவலை, மக்கள் சபையில் தலைவர் அறிவித்திருக்கிருர்.

கண் மருத்துவச் சாலையின் நூற்றண்டு விழா

லண்டனிலுள்ள ராயல் கண் வைத்தியசாலை சென்ற நூறு ஆண்டுகளாகப் பணியாற்றிவருகிறது. 1857-ல் முதல் ஆறு மாதங்களில் அங்கு சிகிச்சை பெற்றவர்களுடைய எண்ணிக்கை 298; இவ்வாண்டில் 88,000 பேர் அதே வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருக்கிருர்கள்.

லாபம் கருதாமல் உர விநியோகம்

ஏ. கோவிந்தசாமி கேள்விக்கு அமைச்சர் பதில்

சென்னை, நவ. 11—

"இலாபத்தை எதிர்நோக்காமல் விவசாயிகளுக்கு உரம் விநியோகம் செய்யக்கூடாதா?" என்று சட்டமன்றத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

"அம்மோனியம் சல்பேட் உரம் அப்படித்தான் விவசாயிகளுக்கு விற்கப்படுகிறது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

வெள்ளையரல்லாதார் அனுபவிக்கும் கொடுமைகள்

தென்னுப்பிரிக்காவில் நாளும் வளருகின்றன

30,000 பேரை வேலையிலிருந்து துரத்தத் திட்டம்

ஜோஹான்ஸ்பர்க், நவ. 10—

தென்னுப்பிரிக்காவில் தேசீய சர்க்காரின் இன ஒதுக்கல் கொடுமை நாளும் வளர்ந்து வருகிறது.

நாட்டில் ஆடை உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான வெள்ளையரல்லாதாரை வேலையிலிருந்து துரத்துவது என தேசீய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம்.

இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள 47,000 பேர்களில் 35,000 பேர்களை வெள்ளையர்களாக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறதாம்.

இந்தச் சட்டம் சுமார் 30,000 வெள்ளையரல்லாதாரை பிழைப்புக்கு வழி இன்றித் திண்டாடச் செய்யும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆடை உற்பத்தித் தொழிலை வெள்ளையர் மயமாக்கும் திட்டத்தை அமுலாக்குவதற்கு, போதுமான வெள்ளையர்கள் கிடைக்கவில்லை என்றுலும், திட்டத்தை அமுல் நடத்த துடிப்புடன் இருக்கிறதாம், சர்க்கார்!

வெள்ளையரல்லாதாரை ஆயிரக்கணக்கில் வேலையிலிருந்து நீக்கிவிட்டு, அவர்களின் இடத்தில் வெள்ளையரை அமர்த்தும் இந்தக் கொடுமை தேசீய சர்க்கார் இழைத்து வரும் அடுக்கடுக்கான கொடுமைகளில் முதன்மையானது என்றும் கூறப்படுகிறது.

இம்மானுவேல் கொலை வழக்கு

பரமக்குடி, நவ. 11—

இம்மானுவேல் கொலை வழக்கு பற்றி பூர்வாங்க விசாரணை நடத்த ஒரு தனி நீதிமன்றம் நிறுவப்படலாம் என்று தெரியவருகிறது.

புதுக்கோட்டையிலோ, மதுரையிலோ வழக்கு நடைபெறும் என்றும், அநேகமாக புதுக்கோட்டையிலேயே நடைபெறலாம் என்றும் கூறப்படுகிறது.

ஆராய்ச்சித் துறைக்கு 30 கோடி பவுன்கள்!

1955—56-ல், ஆராய்ச்சி அபிவிருத்திப் பணிகளுக்காக 30 கோடி பவுன் பிரிட்டன் செலவிட்டிருக்கிறதாம். இதில் 60 சதவிகிதம் பாதுகாப்புத்துறை ஆராய்ச்சிக்காகவும், 40 சதவிகிதம் தொழில் அபிவிருத்திக்காகவும் செலவிடப்பட்டது.

விஞ்ஞான தொழில் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் நிபுணர்களின் எண்ணிக்கை 46,500. இவர்களில் சுமார் 2,000 பேர் வைத்திய-விவசாய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள்.

மாயூரத்தில்
எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி

நகர தி. மு. கழக வரவேற்பும்—பாராட்டும்

கட்டிட நிதிக்கு ரூ. 150 நன்கொடை

மாயூரம் நகர தி. மு. கழகத்தின் சார்பில், 7—11—57 மாலை 5 மணிக்கு ஆசிரியர் வேலாயுத மன்றத்தில், தோழர் ஆர். பழனிச்சாமி தலைமையில் இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி ஆகியோருக்கு ஓர் வரவேற்பும்—தேநீர் விருந்தும் அளிக்கப்பட்டன.

தலைவர் முன்னுரைக்குப்பிறகு நகரச் செயலாளர் தோழர் என். இட்டப்பா வரவேற்பிதழ்களைப் படித்தளித்து மாலையணிவித்தார்.

பின்ன தோழர்கள் ஆர். இராமானுசம் எம். சி., து. காசிநாதன், புலவர் நாராயணசாமி, கே. எஸ். சௌந்தாராசன் ஆகியோர் வரவேற்றுப் பேசினர்.

தோழர் டி. வி. நாராயணசாமி வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு மேலும் பேசுகையில், 'எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து நான் இந்த இயக்கத்திலிருக்கிறேன்; என் வாழ்நாள் முழுவதும் அண்ணா அவர்களின் வழி நடப்பேன்; நமது கழகம் கலைத்துறையில் நல்ல மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது; இன்று கலைத்துறையில் முன்னணியில் நடைபோடுபவர்கள் நமது கழகக் காளைகளே' என்று கூறினார்.

அடுத்து 'முதலாளி' படைரக்டரான தோழர் வி. சீனிவாசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தி. மு. கழகம் சனநாயக அடிப்படையில் பண்பட்ட—சிறந்த தலைவர்களால் இயக்கப்பட்டுவரும் சிறந்த அரசியல் கட்சியாகும். தென்னக மக்களின் தேவைகளை உணர்ந்து மக்களுக்காகப் போராடிவருகிற தி. மு. கழகம் சொல்லுகின்ற கருத்துகள் இன்றில்லாவிட்டாலும் வேறொரு காலத்தில் வெற்றி பெற்றுத்தான் தீரும்; கடந்த கால அரசியல் சம்பவங்கள் இதை நிரூபித்துக் காட்டுகின்றன."

இறுதியாக இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்கள் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் பேசியதாவது:—

"எனக்கு முன்னால் பேசிய டைரக்டர் நண்பர் சீனிவாசன் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு நமது கழகத்தைப்பற்றிச் சொல்லிய கருத்திற்கும் இப்போது அவர் பேசிய பேச்சிற்கும் நிரம்ப இடைவெளி இருக்கிறது. இன்னும் சிலநாளில் நமது மாநாடு ஒன்றில் கழகக் கொள்கைகளை விளக்கக்கூடிய அளவுக்கு அவர் வந்துவிடுவார் என்று நம்புகிறேன்; நாம் கொண்டிருக்கும் கொள்கை அந்த அளவுக்கு வலிவுள்ளது.

"நீ ஒரு நடிகனாக இருக்க விரும்புகிறாயா, அல்லது தி. மு. கழகத்தில் இருக்க விரும்புகிறாயா?—என்ற ஒரு நிலை பிறக்குமேயானால், நிச்சயம் நான், தி. மு. கழகத்தில்தான் இருப்பேன்; அதுதான் எனது மூச்சு.

"மத்தியதி மு.கழகத்தின் பெயரில் வாங்கப்படவிருக்கும் இந்தக் கட்டிடத்திற்கு எனது நன்கொடையாக ரூ. 150 அளிக்கிறேன்."

அடைமழையிலும் திருட்டு

சென்னை, நவ. 12—

4—11—57 இரவு மழை பெய்துகொண்டிருந்த சமயம் சென்னை, புதுமனைக் குப்பத்தில் வசிக்கும் திரு. எஸ். கருப்பன் செட்டியார் என்பவரின் வீட்டிலிருந்து சுமார் ரூ. 2,000-க்கு மேற்பட்ட பொன் நகைகள், துணிகள், ரூ. 75 ரொக்கம் ஆகியவை திருட்டுப் போய்விட்டதாகத் தெரிகிறது.

சிதம்பரம் வட்டத்தில் மு.கருணாநிதி, கே.ஏ.மதியழகன், தில்லை-வில்லாளன்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்

குமராட்சி:

2—11—57 இரவு 8-மணியளவில் குமராட்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில், தோழர் தில்லை-வில்லாளன் பேசுகையில், 'தி. மு. கழகம், திராவிட நாடு திராவிடருக்கே என்ற உயரிய—உன்னத இலட்சியத்தை நோக்கிப் பயணம் செய்கிறது; தி. மு. க.-வை நடத்திச் செல்லும் தலைவர்களுக்கோ பொறுப்புகள் நாளுக்குநாள் வளர்ந்தபடியுள்ளன; அவரவர்கள் தங்கள் சக்திக்குமீறிய அளவில் உழைத்தபடியுள்ளனர்; சிதம்பரம் வட்டத்தில் எத்தனை ஆயிரம் பேர்கள் அதிகம் கழகத்தில் சேர்ந்து அவர்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு, இலட்சியம் விரைவில் கைகூடும்' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"திராவிட முன்னேற்றக் கழகம், தொழிலாளர்களின் தோழன்—பாட்டாளி மக்களின் நலன் பாதுகாக்கும் நல்ல காவலன்—விவசாயிகளுக்கு உற்ற துயர் துடைக்கும் நற்பணியாளன். அண்மையில் திருச்சி மாவட்டத்தில் நங்கவரம் எனும் இடத்தில் நிலப் பிரபுக்களை எதிர்த்துப் போராடி, வெற்றி கண்ட வீரர் மு. கருணாநிதி; ஆகவே, விவசாயிகளே—பாட்டாளிகளே—தொழிலாளர்களே—தி. மு. கழகத்திலே பங்கு பெறுங்கள்."

அடுத்து தோழர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள் பேசுகையில், குறிப்பிட்டதாவது:—"தி. மு. கழகம், ஆதித் திராவிடர்களுக்கு என்ன செய்தது என்று கேட்கப்படுகிறது — மிகவும் வேடிக்கையான கேள்வி; தனது பெயரையே—அவர்களின் பெயராகிய திராவிடர் என்ற சொல்லை முதலாகவைத்தே துவக்குகிறது. தீண்டாமை ஒழிய தி. மு. கழகம் பாடுபட்டு வருகிறது. சட்டசபையில் முதுகுளத்தூர் சண்டை பற்றி அவர்கள் ஆற்றிய உரை ஆதித் திராவிடர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு; நங்கவரத்தில் நான் முன்னின்று நடத்திய போராட்டம் உழவர் பெருமக்களாகிய ஆதித் திராவிட மக்களின் வாழ்விலே வளம் பெருக்கத்தான். நங்கவரம் நிலப் பிரபு ஒரு பார்ப்பனர்; அவரை எதிர்த்துத்தான் போர்; உழவர்களின் ஒற்றுமையும் கட்டுப்பாடும், நிலப் பிரபுவைப் பணிய வைத்து—கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன—அறப்போர் வெற்றிபெற்றது. மந்திரி பக்தவத்சலம் போன்றோர், தாங்கள் நிறைவேற்றிய '60-40' சட்டத்தின் மூலம் ஓட்டு பெற்றோர்களே தவிர, உழவர்களுக்கு வாழ்வு தரவில்லை. அந்தச் சட்டத்திலுள்ள ஓட்டையை அடைக்க வழி தெரியாது, பிரபுக்களிடம் மாட்டிக்கொண்டு தவித்தனர்; ஆனால் கழகம், நிலப் பிரபுக்களைப் பணியவைத்துவிட்டது. ஆகவே, தோழர்களே, தி. மு. கழகத்தில் சேர்ந்து பணியாற்றுங்கள்."

கூட்டத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

பேச்சாளர்கள் மூவருக்கும் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் ஏராளமாக அணிவிக்கப்பட்டன. செயலாளர் பழனிமுத்து நன்றி கூறினர்.

காட்டுமன்னார்குடி:

இரவு 10 மணிக்கு காட்டுமன்னார்குடி தி. மு. கழகச் சார்பில், கூட்டத்திற்கென அமைக்கப்பட்டுள்ள சிறப்பான பந்தலில் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

தலைவர் முன்னுரையாக, 'தி. மு. கழகம் துவங்கும் அறப்போரிலீடுபடும் ஒவ்வொருவரும் கண்ணியம், கட்டுப்பாடு, கடமை என்ற மூன்று கோட்பாடுகளை மனதிலிறுத்தி காரியமாற்ற வேண்டும்; போரில் வெற்றி பெறுகிறோமா, இல்லையா என்பதுகூட பின்னால் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி; ஆனால், போரை எப்படி நடத்துகிறோம் என்பதே பிரச்சினை; 'வடக்கு வாழ்கிறது—தெற்கு தேய்கிறது' என்பதை விளக்குகிறோம் இப்போது — நாளை இதற்காகவே போர் துவங்கவும் நேரிடும்; இந்தி எதிர்ப்புப் போர், அந்தப் போரின் முதல் கட்டமாக இருக்கும்; ஆகவே, தோழர்கள் ஆயிரக்கணக்கில் கழகத்தில் சேர்ந்து அறப்போரிலீடுபட்டு பணியாற்ற வேண்டும்' என்று வேண்டினர்.

கூட்டத் துவக்கத்தில் தோழர் லா. ந. இராமலிங்கம் பேசினர்.

அடுத்து பேசிய தோழர் கே. ஏ. மதியழகன், 'இந்தி ஏகாதிபத்தியத்தின் கொடுமை—வடவரின் ஆணவம் இரண்டும் உடனடியாக எதிர்க்கப்பட வேண்டும்; அதற்கான அரும்பணியைச் செய்வது தி. மு. கழகம்' என்று உரைத்தார்.

இறுதியாகப் பேசிய தோழர் மு. கருணாநிதி, 'வடக்கு வாழ்கிறது — தெற்கு தேய்கிறது என்று ஏன் கூறுகிறோம்—சட்டசபை நுழைவால் தி. மு. கழகம் சாதித்தது என்ன—தி. மு. கழக எம். எல். ஏ.-க்களை காங்கிரஸ் பெண்களே அடக்கிவிடுவார்கள் என ஆர்ப்பரித்த கனம் சுப்பிரமணியம் என்ன ஆனார்—அவர் பேச்சைக்கேட்டுப் பேசிய பெண் உறுப்பினர்கள் எப்படி அடங்கினார்கள்—புள்ளி விவரம் நமக்குத் தெரியவில்லையா, அவர்களுக்குத் தெரியவில்லையா—இந்தி ஆதிக்கம் ஒழிந்திட வழி என்ன—எனப் பல பொருள்களை விளக்கி அழகியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

கூட்ட ஆரம்பத்தில் காட்டுமன்னார்குடி பிர்க்காவில் உள்ள எல்லா தி. மு. கழகக் கிளைகள் சார்பிலும் மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு ஆறு கிளைகள் சார்பில் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

சிதம்பரம்:

3—11—57 பகல் 1 மணிக்கு, சிதம்பரம் வ.உ.சி. தெருவிலுள்ள அறிவொளி மன்றத்தை தோழர்கள் மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன், தில்லை-வில்லாளன் ஆகியோர் பார்வையிட்டு மன்ற உறுப்பினர்களைப் பாராட்டியதோடு, அறிவுரை புகன்றனர்.

வல்லம்படுகை:

மாலை 5-30 மணிக்கு, திரு. வி. க. படிப்பகச் சார்பில் தோழர் மு. கருணாநிதி அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது; வரவேற்புக்கு தக்க முறையில் பதிலுரை ஆற்றினர்.

மாலை 6 மணியளவில் வல்லம்படுகையில் தோழர் அரங்கநாதன் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டனர்; முதலில் தோழர் இரத்தின-பால குருசாமி நீண்டநேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். பிறகு, தோழர் தில்லை-வில்லாளன், மதியழகன் ஆகியோர் பேசிய பிறகு தோழர் மு. கருணாநிதி தி. மு. கழகத்திற்கும், மற்ற அரசியல் கட்சிகளுக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்கி உரையாற்றினர்.

அண்ணாமலை நகர்:

மாலை 7 மணியளவில் அண்ணாமலை நகர் குளக்கரையில் தி. மு. கழக மாணவர் கிளை சார்பில் தோழர் கணபதி இராமசுப்பையா தலைமையில் கூட்டம் துவங்கியது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர், சென்ற பருவத்தில் விடுதியில் இடம் மறுக்கப்பட்டு உண்ணாவிரதமிருந்தவர். அவர், கூட்டத் துவக்கத்தில் விடுதி நிர்வாகத்தினர் எப்படி பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அநீதி புரிந்தனர் என்பதை விளக்கினார்.

அடுத்து, தோழர்கள் கோபாலகிருட்டினனும், பொன்-சொக்கலிங்கமும் பேசினர்.

பிறகு, தோழர் தில்லை-வில்லாளன் மாணவர்களிடம் பரவிவரும் பகுத்தறிவுக் கருத்துக்களைத் தடுக்க, அவர்களை விடுதியை விட்டு வெளியேற்றுவது என்பது தவறான வழியாகும் என்பதை விளக்கிப் பேசினர்.

அடுத்து தோழர் கே. ஏ. மதியழகன் ஆங்கிலத்தில் ¾ மணி நேரம், இந்தி நுழைப்பிலே உள்ள வடவர் சூழ்ச்சியை விளக்கிப் பேசினர்.

இறுதியாக தோழர் மு. கருணாநிதி தி. மு. க.-வில் மாணவர் பங்கு—சட்டசபையில் தி. மு. க.—இந்தி வந்தால் நாம் தொடுக்கும் அறப்போர்—இவைகளை விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினர்.

ஆதிவராகநத்தம்:

இரவு 10 மணிக்கு ஆதிவராகநத்தம் தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வழக்கறிஞர் வி. வி. சாமிநாதன் தலைமை வகித்தார்; தோழர்கள் சி. ஜம்பு, தில்லை-வில்லாளன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் பேசிய பிறகு தோழர் மு. கருணாநிதி, நாட்டிலே உள்ள அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் எந்தக் கோணத்திலிருந்து பணியாற்றுகின்றது—தி. மு. க. எப்படிப் பணியாற்றுகிறது என்பது பற்றி நீண்டநேரம் பேசினர்.

சிதம்பரம்:

இரவு 10 மணியளவில், தி. மு. க.—மாணவர் கிளையினர் தந்த விருந்தில் கலந்துகொண்டு, மாணவர் கிளை அலுவலகத்தில் தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி, அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்தார்.

தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் தோழர் மு. கருணாநிதியின் படத்தைத் திறந்துவைத்தார்.

பாண்டியன் ஆலை நிர்வாகிகள் போக்கு

ஆலை மூடப்படுகிறது

மதுரை, நவ. 11—

மதுரை ஆலையின் ஒரு பிரிவான பாண்டியன் ஆலையில் 'ரிங் பிரேம்' இலாகா தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்கிறார்களென்று காரணம் காட்டி, பாண்டியன் ஆலையை நிர்வாகிகள் மூடிவிட்டனர் என்று தெரியவருகிறது.

அக். 13: இந்தி எதிர்ப்புக் கூட்டங்கள்

★

காரைக்குடி:

இரவு 8 மணிக்கு வள்ளுவர் படிப்பகத்தின் பொதுக்குழுக் கூட்டம் திரு. சி. சிவநேசபாண்டியன் தலைமையில் நடைபெற்ற போது கண்டனத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

கரிசல்பட்டி—சின்னவாகைகுளம்:

கரிசல்பட்டியிலும், சின்ன வாகைக்குளத்திலும் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் தோழர்கள் எஸ். முத்து, கே. எஸ் சந்தானம், உ. வே. கண்ணுசாமி ஆகியோர் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்.

கைத்தறித் துணி விற்பனைக் கழிவு

குறைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

மதுரை நகர் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளின் கூட்டம் 8—11—57-ல், மதுரை, கிருஷ்ணாபுரம் நெசவாளர் கூட்டுறவு சங்கக் கட்டிடத்தில், திரு. சூரியக்கண் தலைமையில் கூடியது.

சர்க்கார் கொடுத்துவரும் கைத்தறித் துணி விற்பனைமீது 'கழிவு' 9 புதுக் காசாக இருந்ததை 6 புதுக்காசாக குறைப்பதை ஆட்சேபித்து ஒவ்வொரு சங்கமும் தீர்மானங்கள் மூலமாயும், தந்திகள் மூலமாயும் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்வதென்றும், மதுரை கலெக்டர் சென்னை முதல் அமைச்சர் தொழில் அமைச்சர் ஆகியவர்களைச் சந்தித்து வேண்டிய நடவடிக்கை எடுக்க 5 பேர் கொண்ட தூதுக்குழு ஒன்றை அனுப்புவதென்றும், திரு. சோ. கருப்பையா அவர்களை கன்வீனராகக்கொண்ட 11 பேர்கள் அடங்கிய நடவடிக்கை கமிட்டி அமைத்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

'அணையா ஜோதி'—நாடகம்

21—10—57 மாலை 6 மணியளவில் சென்னை சௌந்தர்யமகாலில் புதுமலர்ச்சிக் கலைமன்றத்தைச் சார்ந்த நாடகக் குழுவினரால் 'அணையா ஜோதி' என்ற நாடகம் தோழர் எம். எஸ். வெங்கடாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், வே. கபிலன் ஆகியோர் நாடகத்தையும், நாடகத்தைத் தீட்டிய தோழர் கே. டி. வேலன் அவர்களையும், நாடகத்தில் பங்கு ஏற்று நடித்த அனைவரையும் பாராட்டிப் பேசினர்.

மக்கள் சபையில் 'இராமநாதபுரம்'

ஒத்திவைப்புப் பிரேரணைக்கு எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 11—

'இராமநாதபுரம்' சம்பவங்கள் பற்றி மக்கள்சபையில் விவாதிக்க வேண்டுமெனக் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணை பற்றி தமது முடிவை அறிவிப்பதை சபைத் தலைவர் அனந்தசயனம் அய்யங்கார் ஒத்திவைத்தார்.

ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வரப்பட்டவுடன், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் எழுந்து, 'இதுபற்றி மக்கள் சபையில் விவாதிக்கக்கூடாது எனவும், விவகாரம் முழுக்க முழுக்க மாநிலத்தைப் பொறுத்தது என்றும் சென்னை சர்க்கார் ஆட்சேபித்திருப்பதாக'த் தெரிவித்தார்.

அதன் பிறகு, ஒரு காங்கிரஸ் உறுப்பினர் எழுந்து, இந்த விவகாரத்தை விவாதிக்க மக்கள் சபைக்கு உரிமை உண்டு என்றும், விவகாரம் எழுந்த நேரத்தில் மத்திய மந்திரி ஒருவர் கலகப் பிரதேசங்களுக்குச் சென்று வந்து அறிக்கை தந்திருக்கிறார் என்றும் கூறினார்.

'மத்திய மந்திரி சென்றதினாலேயே, அவர், மாநில விவகாரங்களில் தலையிட்டதாகாது' என்று பண்டித நேரு வியாக்கியானம் செய்திருக்கிறார்.

அதன்பேரில் சபைத் தலைவர், தமது தீர்ப்பினை ஒத்திவைத்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

மறைவு

குடந்தை நகர தி. மு. க. செயலாளரும், குடந்தை வட்ட தி. மு. க. செயலாளருமான சு. பத்மநாபன் தந்தையார் சுப்பிரமணியம் 7—11—57-ல் இயற்கையெய்தியமை குறித்து நகரச் செயற்குழு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

போராடியது தெரியுமாம்! வெற்றிபெற்றதை அறியாராம்!

சென்னை, நவ. 12—

தி. மு. கழகம் முன்னின்று நடத்திய நங்கவரம் விவசாயிகள் போராட்டம் வெற்றி பெற்றது அரசாங்கத்திற்குத் தெரியாதாம்.

"நங்கவரம் போராட்டத்தை தி. மு. கழகம் நடத்தி, நல்ல முடிவுக்கு வழிகோலியது அமைச்சருக்குத் தெரியுமா?" என்று, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் சட்டமன்றத்தில் கேட்டார்.

"தெரியாது; தி. மு. க. கிளர்ச்சி செய்தது மட்டும்தான் தெரியும்" என்று அமைச்சர் மாணிக்கவேலர் கூறினர்.

"நங்கவரம்போராட்டன்போது முதலமைச்சர் காமராசர், 'சட்டத்திலே சில குறைபாடுகள் உள்ளன; அதைத் திருத்துவதில் தாமதமேற்பட்டுள்ளது' என்று கூறியது தெரியுமா? அந்தக் குறைபாடுகளை நீக்குவதில் தாமதமேன்?" என்று தோழர் அ. அன்பழகன் கேட்டார்.

"சட்டத்தில் குறைபாடு உள்ளது; அதைத் தீர்க்கத்தான் முயற்சித்து வருகிறோம்" என்று அமைச்சர் பதிலளித்தார்.

'ஜமாபந்தி' என்ற பெயரை மாற்றக் கோரிக்கை

அமைச்சர் ஏற்கவில்லை

"'ஜமாபந்தி' என்றால் சாப்பிடுவதைக் குறிப்பதாக உள்ளது; எனவே, இந்தப் பெயரை மாற்ற அரசாங்கம் முன் வருமா?"

என்று, தோழர் ஏ.வி.பி.ஆசைத்தம்பி அவர்கள் சட்டமன்றத்தில் கெட்டார்.

அமைச்சர் மாணிக்கவேலர் இந்த நல்ல யோசனையை ஏற்கவில்லை.

கே: "ஒரு 'ஜமாபந்தி'யில் தரப்படும் விண்ணப்பங்களை அடுத்த 'ஜமாபந்தி'க்குள்ளாவது ஆராய்ந்து முடிவுசெய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?"

"அப்படி ஒன்றும் தாமதம் ஏற்படவில்லை" என்று அமைச்சர் கூறினர்.

கழகக் கூட்டம்

★

புத்தாம்புதூர் :
(திருச்சி மாவட்டம்)
15—11—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : கல. கா. முகம்மதுமீரா
பேசுவோர் :
முக. மீரா
மு. வசனப்பித்தன்
ப. செழியன்
அ. வைத்தியலிங்கம்
(மாலை 3-30 மணிக்கு அவ்வா மில்லில் தி. மு. க. ஊழியர் கூட்டம் நடைபெறும்.)

அஞ்சல் ஊழியர் பொதுக்கூட்டம்

14-11-57 மாலை 6-30 மணிக்கு, சென்னை-பூங்கா நகர் அஞ்சல் நிலைய மனையில் அஞ்சல் ஊழியர்கள் (போஸ்ட்மென்—4-ம் பிரிவு ஊழியர்) பொதுக்கூட்டமொன்று நடைபெறும்; தோழர் டி. எஸ். இராமாநுசம் தலைமை வகிப்பார்; தோழர்கள் டி. எஸ். இராமசாமி, ஆர். பக்தவத்சலு, எஸ். அந்தோணிசாமி, சி. இராசகோபால் நாயக்கர், டி. சிவராம், ஆகியோர், இரண்டாவது சம்பளக் குழு, இடைக்கால நிவாரணம், நாகர்கோயில் மாநாடு ஆகியவை குறித்துப் பேசுவர்.

கே. வி. கே. சாமி நினைவு மன்றத் துவக்க விழா

15—11—57 மாலை 6 மணிக்கு, சென்னை (37-வது வட்டம்), இராயப்பேட்டை, ஒயிட் சாலை 2-வது தெரு அருகிலுள்ள திடலில் கே. வி. கே. சாமி நினைவு மன்றத் துவக்க விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும்; தோழர் கோ. இளவரசு தலைமைவகிப்பார்; தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம். எல். ஏ., கண்ணதாசன், தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

★★★★★★★★★★★★★★★★★

'நம் நாடு' தனி இதழ்

தேசீய கௌரவப் பாதுகாப்புச் சட்டம்பற்றி சட்டமன்றத்தில் கடந்த 11—11—57 அன்று அண்ணா அவர்கள் ஆற்றிய உரை—சட்டசபையில் ஆற்றியபடியே—17—11—57 ஞாயிறன்று வெளிவர விருக்கும் 'நம் நாடு' தனி இதழில் இடம் பெறும்.

—ஆசிரியர்

★★★★★★★★★★★★★★★★★

ஆச்சாரியார் ஆய்வுரை

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"சிலர், நாம் ஏதோ பண ஆசை பிடித்தவர்கள் என்றும், உத்தியோக ஆசை கொண்டவர்கள் என்றும் கருதி நமக்கு இலஞ்சம் கொடுக்க முற்படுகின்றனர்—'இந்தி கற்போருக்கு உத்தியோகம், பரிசு கிடைக்கும்' என்று பேசுகின்றனர்!

"என்னைக் கட்டாயப்படுத்துகிறவர்களை நான் வரவேற்க முடியும்; ஆனால், இலஞ்சம் கொடுப்போரைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

"100 ஆண்டுகளுக்கு இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி, பின் வேண்டுமானால் இந்தியை ஆட்சி மொழியாக்கட்டுமே!"

மேலும் பேசிய ஆச்சாரியார் அவர்கள், 'டில்லி சர்க்காரின் மொழிக் கொள்கை தங்களுக்குப் பிடிக்கவில்லை என்று மாணவர்களும், பண்டித நேருவுக்கு அமைதியாக உணர்த்த வேண்டும்; அதற்காக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட வேண்டுமென்பதல்ல' என்றும் கூறியிருக்கிறார்.

இலாகாக்கள் தணிக்கை முறை—சர்க்கார் நிலை

சென்னை, நவ. 12—

"சென்னை பஸ் போக்குவரத்து பால் பண்ணை, பொறியியல், தொழிற்சாலை, சின்கோனா முதலியவற்றை சென்னை அரசாங்கம் சொந்தமாக நடத்தி வருகிறது" என்று நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"இப்போதுள்ள இலாகாக்கள் தணிக்கை முறையை மேலும் சீரிய முறையில் தணிக்கை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

என்று, தோழர் எம். பி. சுப்பிரமணியம் கேட்டார்.

"இப்போது உள்ள தணிக்கை முறையே சரியாக உள்ளது" என்று அமைச்சர் பதிலளித்தார்.

சென்னை சர்க்காருக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!

சென்னை, நவ. 12—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால், திட்டம் குறைக்கப்படுகிறதே, இதைப்பற்றி மத்திய அரசாங்கம் சென்னையைக் கலந்து ஆலோசித்ததா?"

என்று, தோழர் எம். பி. சுப்பிரமணியம் சட்டமன்றத்தில் கேட்டார்.

"வெளியில் கூறப்படுவதுதான் அரசாங்கத்திற்கும் தெரியும்; மத்திய அரசு ஒன்றும் தெரிவிக்கவில்லை" என்று அமைச்சர் வெங்கட்ராமன் பதிலளித்தார்.

வடவருக்குச் சலுகைகள் ஏன்?

தமிழரைமட்டும் கட்டுப்படுத்த சட்டமா?

லேவாதேவி சட்ட விவாதத்தின்போது கழக உறுப்பினர்கள் பேச்சு

சென்னை, நவ. 12—

வட்டிக்குப் பணம் கொடுத்து-வாங்கும் தொழிலைப்பற்றி இன்று சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர்கள் எஸ். எம். அண்ணாமலை, சி. நடராசன், ப. உ. சண்முகம் ஆகியோர் ஆற்றிய உரை இங்கு தரப்படுகிறது :—

தோழர் எஸ். எம். அண்ணாமலை அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தச் சட்டத்தில் நல்லதும் கெட்டதும் உள்ளன. சட்டத்தின் 7-வது பிரிவில், 'ஈடு செய்யப்பட்ட கடன்களுக்கு 9 சதவிகிதம் வட்டி' என்று நிர்ணயித்திருப்பது பற்றி நான் சந்தேகப்படுகிறேன். இது விவசாயிகளைப் பாதிக்கும் என்று நான் கருதுகிறேன். விவசாயிகளுக்குச் சாதகமாக ஆச்சாரியார் கொண்டுவந்த சட்டத்தின் நன்மைகளை விவசாயிகள் இழக்கநேரிடும் என்று அஞ்சுகிறேன்.

"அடுத்து, இந்தச் சட்டத்தில் 'உண்டியல் முறை'க்கு அளிக்கப்பட்டுள்ள விலக்கைப்பற்றி ஒன்று கூறுகிறேன். இதை வடநாட்டிலிருந்து வந்தவர்கள் நடத்திவருகிறார்கள். விதி விலக்களிப்பது அவர்களின் சுரண்டலுக்கு வழி செய்யும். இந்த நாட்டுத் தமிழர்களை மட்டும் கட்டுப்படுத்துவது சரியல்ல. எனவே, மூல்தானிகளையும், மார்வாடிகளையும் இந்தச் சட்டத்திற்குள் கொண்டுவர வேண்டும்.

"விவசாயிகள் குறித்த 6 மாத காலத்தில் கடனைத் திருப்பித் தராவிட்டால், அவர்களிடம் தடியெடுத்துக்கொண்டு வசூலிக்க முற்படுகிறார்கள்.

"இந்த அரசாங்கம் வடவருக்குப் பயந்தோ, மத்திய அரசுக்கு அஞ்சியோ வடவரைக் கட்டுப்படுத்த சட்டத்தில் முற்படவில்லையே ஏன்?

"அரசாங்கமே மேலும் பல கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி தாமதத்தைத் தவிர்த்து, நில அடமான பாங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன்தர ஏற்பாடு செய்ய முனையவேண்டும்; சட்டத்தின் குறைபாடுகளைப் போக்க வேண்டும்.

தோழர் சி. நடராசன் அவர்கள் பேசுகையில், சட்டத்தை வரவேற்று, அதில் உள்ள சில குறைபாடுகளை எடுத்துக்காட்டினர்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அரசாங்கப் பதிவில்லா ஊழியர், நடுத்தர மக்கள் இவர்களின் நன்மையைக் கருதி இந்தச் சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதே நேரத்தில் இந்தச் சட்டம் கொண்டுவர வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்று சிந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"இந்த நிலையை நாம் படிப்படியாக வளர்த்து வந்துள்ளோம். டெல்லியிடம் இம்மாநிலம் கையேந்தும் நிலையை வளர்த்து விட்டுவிட்டோம். இந்த நாட்டின் தொழில்கள் வளர்க்கப்படவில்லை; அதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

"இந்தச் சட்டத்திலுள்ள பல குறைபாடுகளைத் திருத்தவேண்டும். முன்பு தமிழர்கள் நடத்தி வந்த தொழில்கள் பெரும் அளவை வடநாட்டவர் கைப்பற்றி விட்டனர்; அனாதைகளாக வந்த வடவர், வட்டித் தொழில் மூலம் பெருத்த பணக்காரர்களாகிவிட்டனர்.

"இந்தச் சட்டத்தின் மூலம் கடந்த மூன்றாண்டு காலத்தில் வாங்கப்பட்டுள்ள கடன்களை காலாவதியாக்குவது அவசியம்; இது, என். ஜி. ஓ.-க்களுக்கும் நடுத்தர வகுப்பினருக்கும் உதவியாக இருக்கும்.

"சட்டத்தின்கீழ், 'உண்டியல் முறை' கடன்களும் கொண்டுவரப்பட வேண்டும்.

"இந்தத் தொழிலை நடத்த வடவருக்குத் தரப்பட்டுள்ள அனுமதியை நிறுத்திவிட்டு, தென்னாட்டவருக்கே அனுமதி தர வேண்டும.

"மேலும், விதவைகள், படிக்காதவர்கள் இந்தத் தொழிலை நடத்தினால் சட்டத்திலிருந்து விதிவிலக்களிக்கவேண்டும்."

தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்தச் சட்டத்தின் காரணமாக யார் கலங்குவார்கள் என்பது பற்றி, இச்சட்டத்தின்மீது பேசியவர்களில் ஒரு சிலர் கலங்குவதை நான் காண்கிறேன்.

தோழர் அண்ணாமலை அவர்கள் பேசுகையில், 'வடநாட்டவருக்கு மட்டும் ஏன் விதிவிலக்கு தரப்படுகிறது?' என்று கேட்டதும் ஆளும் கட்சியில் ஒருசிலர் கோபித்துக் கொண்டார்கள்; 'இதற்கு கூடவா வடநாடு—தென்னாடு' என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

"சட்டத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்த திரு. சீனிவாச அய்யர் அவர்கள், 'வடநாட்டவர்' என்று கூறவில்லையே தவிர, அழகாக, 'ஷைலாக் போன்றவர்கள்' என்று குறிப்பிட்டார்.

"வடவர்கள் 'ஷைலாக்'குள் மட்டுமல்ல; அதைவிடக் கொடியவர்கள். 'ஷைலாக்' தன் ஒப்பந்தத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை—ஏமாந்தான். வடநாட்டவர் அப்படியல்ல; அதனால்தான், 'ஷைலாக்கை' விடக் கொடியவர்கள் என்று கூறினேன். இத்தகையவர்களுக்கு ஏன் விதிவிலக்கு தரப்படவேண்டும்?

"சட்டத்தினால் தமிழகம் எங்கும் சாட்டையடி கொடுத்துவிட்டு; 'சௌகார்பேட்டை'யை மட்டும் ஏன் அடிக்க அஞ்சவேண்டும்? கண்ணகி மதுரையை எரித்தபோது, 'தீ' சில பகுதிகளுக்குப் போகாமல் தடை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சட்டமும் அப்படித்தான் உள்ளது.

"இந்தச் சட்டம் யாருக்கு? எல்லோரையும் கட்டுப்படுத்தி, உண்டியல் முறை தொழிலை நடத்துபவரையும் கட்டுப்படுத்தி, யாருக்கும் விதிவிலக்கில்லாமல் திருத்தப்பட வேண்டும்.

"சட்டத்தைக்கொண்டு வாருங்கள்; வேண்டாம் என்றுநான் கூறவில்லை. ஆனால், அந்தச் சட்டம் எல்லோருக்கும் அமுலாக்கப்பட வேண்டும். மாரத்தியர், குசராத்தியர், மூல்தானியர்களையும் சட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும்.

"வட்டிக்கடைகளின் கணக்கு தமிழில் இருக்கவேண்டும். நமக்குப் புரியாத மொழியில் கணக்கு வைப்பதைத் தடுக்க வேண்டும்.

"தமிழர்களை மட்டும் கட்டுப்படுத்தி வடவருக்கு விட்டுக் கொடுப்பது, தீது—தகாதது—பச்சைத் தமிழர் ஆட்சியில் கூடாதது."

பின்னர், சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தனியார் கோயிலில் குடியிருக்கும் ஆண்டவன் அனைவருக்கும் பொதுவானவன் அல்லவாம்!

தாழ்த்தப்பட்டோர்களை அனுமதிக்குமாறு கோர முடியாதாம்!

அறநிலையப் பாதுகாப்புஇலாகாவின் மேற்பார்வையில் 7,467 கோயில்கள் உள்ளன என்றும், 4,957 கோயில்கள் தனியார் வசம் உள்ளன என்றும் அமைச்சர் பக்தவத்சலம் சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார்.

தனியார் வசம் உள்ள கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளலாமே தவிர, கட்டாயப்படுத்துவதற்கில்லை என்றும் அமைச்சர் கூறினர்.

தனியார் வசமுள்ள கோயில்களிலுள்ள ஆண்டவன், 'எல்லோருக்கும் பொது என்ற ஆண்டவன் அல்ல' என்றும் அமைச்சர் கூறினர்.

"திருவையாறு கோயிலில் தீண்டப்படாதவர்களை அனுமதிக்கக்கூடாது என்று பிரதம நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது தெரியுமா?"

என்று, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டார்.

"அது தனியார் கோயில்" என்று அமைச்சர் கூறினர்.

"தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலில் இலவசமாக 'அர்ச்சனை' செய்ய சலுகை காட்டப்படுமா?"

என்று தோழர் ஏ. கோவிந்தசாமி கேட்டார்.

"தாங்களே செய்துகொள்ளலாம்; வேறு ஒருவர் செய்ய வேண்டுமானல் பணம் தர வேண்டும்" என்று அமைச்சர் கூறினர்.

சிங்காரவேலர் பகுத்தறிவு மன்ற ஆண்டு விழா

15—11—57 மாலை 6 மணிக்கு, சென்னை-இராயபுரம் பனைமரத் தொட்டி அம்மன்கோவில் எதிரில், சிங்காரவேலர் பகுத்தறிவு மன்ற முதல் ஆண்டு விழா நடைபெறும். தோழர் சி. இளங்கோ தலைமைவகிப்பார். தோழர்கள் ப. உ. சண்முகம் எம். எல். ஏ; சந்தானம் எம. எல். ஏ; என். சீவரத்தினம், கு. இரா. அன்பரசு, அன்புரோசு ஆகியோர் பேசுவர்.

வ. உ. சி. மன்ற முதல் ஆண்டு விழா

17—11—57 மாலை 5 மணிக்கு, மெய்யூர்-சதுரங்கப்பட்டினம் வ. உ. சி. மன்ற முதல் ஆண்டு விழா தோழர் ஜே. ஏ. வகாப் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஆர். எஸ். பாண்டியன், வெற்றி வேந்தன் முதலியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடம் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.